**22.01.2026**

**MCOP. No. 195/2019**

**எ.ம.சா.1 – திரு.கார்த்திக்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 01.07 பி.ப**

TN 60 T 5358 என்ற வாகனம்தான் விபத்து ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் TN 60 T 5358 என்ற வாகனத்தின் பதிவெண்தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 ஆன காப்பீட்டு நிறுவனத்தின் பாலிசி IFFCO TOKIO General Insurance Company என உள்ளது என்றால் சரிதான் ஆனால், அந்த பாலிசி ஆவணமானது முறைகேடாக தயார் செய்யப்பட்டதாகும். அதற்கு ஆதரவாக நான் ஏற்கனவே எதிருரையில் குறிப்பிட்டுள்ளேன். அசல் மற்றும் உண்மையான பாலிசியை என் தரப்பு சான்றாவணமாக எ.ம.சா.ஆ.1ஆக குறியீடு செய்துள்ளேன். ம.சா.ஆ.3 ஆவணத்தில் TN 60 T 5358 என்ற வாகனத்தின் பதிவெண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது. இரண்டு பாலிசிக்கும் இடையே உள்ள H மற்றும் N என்ற எழுத்து பிழை காரணமாக மட்டுமே வாகன எண் வேறுபட்டுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் பாலிசியின் உண்மைத்தன்மையை சந்தேகப்படக்கூடிய வகையில் உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக முதல் எதிர்மனுதாரர் தான் செய்த குற்றச் செயலை ஒப்புக்கொண்டு குற்றவியல் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார் அவர் வாகனத்திற்கு உரிய காப்பீடு இல்லை என குற்றப்பிரிவு எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை 1ம் எதிர்மனுதாரர் அதற்கு அபராதம் கட்டவில்லை என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் அவ்வாறு உரிய காப்பீடு இல்லை என்பது குறித்து கருத்துரையும் வழங்கவில்லை என்பதால் சம்பவ நேரத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கு எங்களுடைய நிறுவனத்தின் பாலிசி ஊர்ஜிதத்தில் இருந்தது என்ற அடிப்படையில் எங்கள் நிறுவனம் இழப்பீடு தொகையினை நேரடியாக மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.22 15:13:05 +0530

எங்கள் நிறுவனம் சார்பாக போலீயான பாலிசி என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிக்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக காப்பீட்டு பாலிசியை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு அங்கிகரித்த மற்றும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் அசல் உண்மை பாலிசி என குறிப்பிடப்பட்டுள்ள பாலிசிக்கும் விபத்து காலத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாலிசியானது விபத்திற்கு முன் போடப்பட்ட பாலிசி என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு உண்டான உரிய இழப்பீடு தொகையை செலுத்துவதற்கு உண்டான கடமையிலிருந்து எங்கள் நிறுவனத்தை விடுவித்துக்கொள்ள பின்னிட்டு யோசனை செய்து சிறிய எழுத்துப் பிழையான H மற்றும் N என்ற எழுத்து பிழையை காரணம் காட்டி போலீ பாலிசி என எதிருரை தாக்கல் செய்து அதை வலியுறுத்தும் வகையில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியமானது ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 01.27 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.22 15:13:09 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 22.01.2026